## நாடகக் கலை

தமிழின் முப்பெரும் பாகுபாடுகள்:

⇒ இயற்றமிழ்
⇒ இசைத்தமிழ்
⇒ நாடகத்தமிழ்

**நாடகம் விளக்கம்:**

**நாடகம்– நாடு + அகம்.** நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடகம் எனப்பட்டது. கதையை, நிகழ்ச்சியை, உணர்வை நடித்துக் காட்டுவது நாடகம் ஆகும். **போல செய்தல்** என்னும் பண்பை அடிப்படையாகக் கொண்டது. மரப்பாவை கூத்து பொம்மலாட்டமாக வளர்ச்சி அடைந்த பின்னர் தோற்பாவை கூத்து, நிழற்பாவை கூத்து, என்று புதிய பரிமாணம் பெற்றது. பின்னர் பொம்மைகளை விடுத்து மனிதர்களை வேடம் புனைந்து நடிக்கலாகினர்.

**இலக்கியங்களில் நாடகம் பற்றிய குறிப்புகள்**

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடக பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

**திருக்குறள்**

**கூத்தாட்டு அவைக்குலா தற்று பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று.**

**– (குறள் எண் 332)**

**சிலப்பதிகாரம் –** நாடகம் ஏத்தும் நாடக கனிகை என்று மாதவியை குறிப்பிடுகிறார் இளங்கோவடிகள்

⇒ தனி பாடல்களுக்கு ஆடுவது நாட்டியம்.
⇒ ஒரு கதையை தழுவி வேடம் புனைந்து ஆடுவது நாடகம்.
⇒ பண்டைய காலத்தில் நாட்டியம் நாடகம் இரண்டையும் கூத்து என்றே அழைத்தனர்.
⇒ கூத்து வகைகளை பற்றியும் நாடக நூல்கள் பற்றியும் நமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள்**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நூல்களான முறுவல், சயந்தம் செயிற்றியும் மதிவாண நாடகத் தமிழ் நூல் விளக்கத்தார் கூத்து குணநூல் கூத்து நூல் முதலியன.

**நாடகவியல்**

பரிதிமாற் கலைஞர் செய்யுள் வடிவில் இயற்றிய நூல் நாடகவியல் ஆகும் கிபி **1891** இல் பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் கவிதை நாடக காப்பியத்தை எழுதி வெளியிட்டார் இந்நூல் லாட் லிட்டன் பிரபு எழுதிய மறைவழி என்னும் ஆங்கில கவிதையை தழுவி எடுக்கப்பட்டது.

**நாடக ஆராய்ச்சி நூல்கள்**

⇒ சுவாமி விபுலானந்தரின் மதங்க சூளாமணி
⇒ மறைமலை அடிகளின் சாகுந்தலம்
⇒ நாடக பேராசிரியர் பம்மல் சம்பந்தனாரின் நாடகத் தமிழ்
⇒ ஏழாம் நூற்றாண்டில் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் மத்த விலாசம் என்னும் நாடக நூலை எழுதியுள்ளான்.
⇒ பதினோராம் நூற்றாண்டில் இராசராச சோழன் ஆட்சிக்காலத்தில் இராஜராஜேஸ்வர நாடகம் நடைபெற்றது.

**கட்டியக்காரன் உரையாடல்களோடு கூடிய நாடகம்**

⇒ பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய அருணாச்சல கவிராயரின் ராம நாடகம்.
⇒ கோபாலகிருஷ்ண பாரதியாரின் நத்தனார் சரித்திரம்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ பெரும்பாலான நாடகங்கள் அக்காலத்தில் இராமாயண மகாபாரத காவியங்களின் கவிதை கூறுகளில் இருந்து படைக்கப்பட்டது.

⇒ 19ஆம் நூற்றாண்டில் சமுதாய சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பிடம் பெற்றன.

⇒ காசி விஸ்வநாதர் முதலியாரின் டம்பாச்சாரி விலாசம் குறிப்பிடத்தக்கது. இது தமிழில் எழுதப்பட்ட முதல் சீர்திருத்த நாடகமாகும்

**விடுதலைப் போராட்ட கால நாடகங்கள்**

⇒ கதரின் வெற்றி, தேசியக்கொடி, தேச பக்தி முதலியன.

⇒ கதரின் வெற்றி என்ற நாடகம் தான் தமிழ்நாட்டில் முதன்முறையாக நடத்த பெற்ற தேசிய சமுதாய நாடகமாகும்.

⇒ நாடகத் துறைக்கு பெருந் தொண்டு ஆற்றியவர்கள்

**சங்கரதாஸ் சுவாமிகள்**

⇒ இவரது காலம் 1867 முதல் 1922 வரை

⇒ இவர் தம்முடைய 16 ஆவது வயதிலேயே கவியாற்றில் பெற்று வெண்பா கலித்துறை இசை பாடல்களை ஏற்றத் தொடங்கிவிட்டார்.

⇒ இவருடைய தமிழ் ஆசிரியர் புலவர் ஏறு பழனி தண்டபாணி சுவாமிகள்.

⇒ இரணியன், இராவணன், எமதர்மன் ஆகிய வேடங்களில் நடித்து புகழடைந்த போது இவருடைய வயது 24.

⇒ வண்ணம் சந்தம் பாடுவதில் வல்லவராய் இருந்த சுவாமிகளின் சந்தக்குளிப்புகளின் சோறு சிலம்பங்களை கண்டு அக்காலத்தில் மக்கள் வியப்புற்றனர்.

**கூத்துப்பட்டறை ந. முத்துசாமி**

⇒ இவர் தெருக்கூத்தை தமிழ் கலையின் முக்கிய அடையாளமாகியவர் நாடகக் கலையை மீட்டெடுப்பதை தமது குறிக்கோள் என்று கூறியவர்.

⇒ இவரது நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களை பேசினர் இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

⇒ இந்திய அரசின் தாமரைத்திரு விருதினை பத்மஸ்ரீ பெற்றவர். கலை ஞாயிறு என்று போற்றப்பட்டவர்

⇒ இவர் சமரச சன்மார்க்க சபை என்னும் நாடகக் குழுவை உருவாக்கினார் இக்குழுவில் பயிற்சி பெற்றவர்தான் புகழ்பெற்ற எஸ்.ஜி.கிட்டப்பா.

⇒ 1918இல் மதுரையில் தத்துவ மீனலோசனை வித்துவ பாலசபை என்ற நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியர் பொறுப்பேற்றார். இங்கு உருவானவர்களே டி.கே.எஸ்.சகோதரர்கள்.

⇒ நாடக உலகின் இமயமலை தமிழ் நாடக தலைமை ஆசிரியர் சங்கரதா சுவாமிகள் இவர் பிரகலாதன், சிறு தொண்டர், இலவகுசா, பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி போன்ற 40–க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

**பம்மல் சம்பந்தனார் (1873 முதல் 1964 வரை)**

⇒ தமிழ் நாடகத் தந்தை பம்மல் சம்பந்தனார் இவர் 90க்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியுள்ளார்.

⇒ ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார் இவரது மனோகரன் நாடகம் 70 ஆண்டுகளாக தமிழ் நாடக மேடைகளில் நடந்தது நாடக மேடை நினைவுகள் நடிப்பு கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

⇒ 1891 இல் இவரால் ஏற்படுத்தப்பட்ட சுகுண விலாச சபை தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட முதல் பல பலமுறை நாடக குழுவாகும் இவர் எழுதியுள்ள 94 நாடகங்களும் அச்சு நூல்களாக வெளிவந்துள்ளன. அவற்றுள் மனோகரா சபாபதி சந்திரஹரி சிறு தொண்டர் நாடகம் உத்தமபத்தினி



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

போன்றவை குறிப்பிடத்தக்கவை நாடகத் தமிழ் நாடக மேடை நினைவுகள் பேசும்பட அனுபவங்கள் ஆகின இவர் நாடகம் தொடர்பாக எழுதிய நூல்களாகும்.

⇒ இவர் வெளியிட்ட இதழ் இந்திய நாடக மேடை ஆகும். ஹரிச்சந்திரன் கதையை சந்திர ஹரி என்ற தலைப்பில் பொய் மட்டுமே பேசுகிற ஒருவனை பற்றிய கதையாக மாற்றியதன் மூலம் எதிர்கலை நாடகம் என்ற புதிய பாணியை உருவாக்கினார்.

⇒ அந்த காலத்தில் இரவு முழுவதும் நாடகங்கள் நடைபெறும். இந்த முறையை மாற்றி மூன்றெழுத்து நான்கு மணி நேரத்திற்குள் நாடகத்தை முடிக்கும் முறையை கொண்டு வந்தார்.

1. **<u>பாலாமணி அம்மையார் (19ஆம் நூற்றாண்டு இறுதி )</u>**

❖ முதன் முதலாக முழுவதும் பெண்களை பங்கேற்ற பாலாமணி அம்மாள் நாடக குழுவை தொடங்கி நடத்தியவர்.

❖ இவரின் குழுவில் 70 பெண்கள் இருந்த **நாடக அரசு** என சிறப்பிக்கப்பட்ட இவரின் நாடகங்கள் சமுதாய சீர்திருத்தங்களையே மையக்குருவாக கொண்டிருந்தன.

❖ அவ்வை சண்முகம் எனது நாடக வாழ்க்கை என்று தனது நூலில் பாலாமணி அம்மையார் குறித்து எழுதியுள்ளார்.

❖ கும்பகோணத்தில் நடைபெற்ற இவரது நாடகங்களை பார்ப்பதற்காக ரசிகர்களுக்கு ஆண்கள் அரசு சிறப்பு தொடர்வண்டியை விட்டது. அந்த தொடர்வண்டியை பாலாமணி ஸ்பெஷல் என அழைத்தனர்.

2. **<u>ஆர்.எஸ்.மனோகர் (1925 முதல் 2006 வரை)</u>**

இவர் நாடக காவலர் என போற்றப்பட்டார் இவரின் இயற்பெயர் ராமசாமி சுப்பிரமணியன் ஆகும். 1954–ல் நேஷனல் தியேட்டர் என்ற நாடக நிறுவனத்தை தொடங்கினார். இவர் அரங்கேற்றிய,

**<u>சமூகநாடகங்கள் :</u>**

இன்பநாள், உலகம் சிரிக்கிறது,

**<u>புராண இதிகாச வரலாற்று நாடகங்கள்:</u>**

இலங்கேஸ்வரன், சாணக்கிய சபதம், சூரபத்மன், சிசுபாலன், இந்திரஜித், நரகாசுரன், சுக்ராச்சாரியார்.

**<u>இவருடைய நாடகங்களில் சிறப்பம்சங்கள்:</u>**

- எதிர்மறை கதாபாத்திரங்களை கதாநாயகனாக மாற்றி நடிப்பார்
- சிறப்பான மேடை அமைப்பு
- தந்திரக் காட்சிகள்

**<u>நாடகத்திற்குரிய இசைக்கருவிகள்</u>**

- யாழ்
- முழவு
- ஆகுளி,
- பாண்டில்
- கோடு
- நெடுவாங்கியம்
- குறுந்தூம்பு
- தட்டைப்படை
- சல்லி பதலை

ஆகியவை இசைக்கப்பட்டதாக மலைப்–படுகடாம் கூறுகிறது.

**<u>உலக நாடக நாள்</u>**

❖ ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 27** ஆம் நாள் உலக நாடக நாளாக கொண்டாடப்படுகிறது.

❖ பின்லாந்தில் செயல்பட்டு வருகின்ற சர்வதேச அரங்காற்று நிறுவனத்தின் தலைவராக இருந்த ஆர்.வி. கிவிமா இந்நாளை முன்னோழிந்தார்.

❖ அவ்வை சண்முகனார் அவ்வை மூதாட்டியாக வேடம் ஏற்று புகழ் பெற்றவர் நாடக உலகிற்கு பெருந்துண்டாற்றியவர்

❖ நாடக சாலை யொத்த நற்கலசாலை ஒன்று நீடுழி உண்டோ ? **– மூ.கவிமணி**

❖ 1946 ஆம் ஆண்டு தமிழில் முதன் முதலாக அமைதி என்னும் தலைப்பில் உரையாடல் இல்லாத மௌன நாடகம் பாரதிதாசனால் எழுதப்பட்டது இந்நாடகம் 16 காட்சிகளைக் கொண்டது.

## இசைக்கலை

⇒ இசை கலையை இசைத்தமிழ் என்றும் கூறுவர். இக்கலை காதினால் கேட்டு இன்புறுத்தக்க இன் கலை இயல், இசை, நாடகம் என்னும் தமிழ்களுள் இது ஒன்று. இது மிகப் பழமையானது.

⇒ கற்றறிந்த சான்றோர்கள் இசைத்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை எழுதி இருந்தார்கள். அவற்றில் சில மறைந்து விட்டன சில பெயர்கள் மட்டும் கிடைத்துள்ளன.

⇒ தமிழிசை பற்றிய நூல்களில் தற்போது கிடைக்கப்பட்டுள்ள மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியம் ஆகும். இசையை நரம்பின் மறை என்று தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள

### இரு வகை இசைகள் :

⇒ ஆவண தொழிலிசை, இதன் கருவி பறை,

⇒ இன்ப இசை, இதன் கருவி யாழ்.

### தொல்காப்பியம் எழுத்ததிகாரம் :

"அளபு இறந்து இசைத்தலும்
ஒற்று இசை நீடலும்
உள என மொழிய
இசையோடு சிவணிய
நரம்பின் மறைய
என்மனார் புலவர்"

– தொல்காப்பியர்

### பரிபாடல்

❖ சங்ககாலத்தில் பரிபாடல் என்னும் இசை பாடல்கள் பல பாடப்பட்டிருந்தன பரிபாடல் என்பது இசைப்பாவாதலான் இது இசை பகுப்பு படைத்த புலவரும் பன்னுமிட்டே என்ற பரிமேலழகர் உரையினால் இவை இசை பாடல்கள் என்பதை அறிகிறோம்.

❖ யாப்பருங்கல விருத்தி உரைக்காரரும் பரிபாடல் இசைத்தமிழை சேர்ந்தது என்று கூறுகிறார்.

❖ இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் கலைச்சங்கத்தை கூறும் இடத்தில் அவர்களால் பாடப்பட்ட எத்துணையோ பரிபாடலும் என்று குறிப்பிடுகிறார்.

❖ இவர் கூறிய தலைச்சங்க காலத்து எத்தனையோ பரிபாடல்களில் இக்காலத்து ஒரு பாடல் எனும் எஞ்சி நிற்கவில்லை. கடை சங்கத்தார் பாடிய 70 பரிபாடல்களில் இப்போது உருப்படியாக இருப்பன 22 படி பாடல்களே மற்றவை அழிந்து விட்டன.

### இசைப்பாணர்

❖ தமிழ்நாட்டில் இசை கலையில் வல்லவராய் இருந்தவர் பானர் என்னும் இனத்தவர். இவர்கள் இசை பாடல்களை பாடி புலவர்களிடமிருந்து பொன்னையும், பொருளையும் பெற்றனர். அக்காலத்தில் சமுதாயத்தில் உயர்நிலை பெற்றிருந்த பானர் சில நூற்றாண்டுகளுக்கு பின்னர் தாழ்வுற்றனர்.

❖ கி.பி ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் திருநீலகண்ட யாழ்வாணர், திருப்பாணாழ்வார், பானபத்திரர் ஆகியோர் சிறந்த இசை கலைஞர்கள் ஆவர்.

### சில இசை நூல்கள்

❖ இறையனார் அகப்பொருள் உறைபாயிரத்தில் **சிற்றிசை, பெரிசை** என்னும் இரண்டு இசைத்தமிழ் நூல்கள் கூறப்படுகின்றன

❖ **பஞ்சபாரதீயம்** நாரத முனிவரால் இயற்ற பெற்றது என்று, சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளும், மற்றும் அடியார்க்கு நள்ளரும் குறிப்பிடுகின்றனர்.

## கலைகள்– இசை

❖ இந்திய இசையின் அழகான நுட்பங்களை தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக்கருவிகளில் நாதசுரமும் ஒன்று மங்கள விழாக்களில் வாசிக்கப்படுகிறது. 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் இக்கருவி வாசிக்கப்பட்டது.

❖ 13–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத **இரத்னாகரம்** என்னும் நூலில் கருவி பற்றி குறிப்பிடப்படவில்லை. 13–ஆம் நூற்றாண்டு வரையில் உள்ள வேறு எந்த பதிவுகளிலும் இக்கருவி பற்றி குறிப்பிடப்படவில்லை.

❖ தமிழகத்தின் பழமையான சிற்பங்களிலும் இக்கருவி காணப்படவில்லை. எனவே இக்கருவி இடைக்காலத்திற்கு பின் ஏற்பட்ட கருவியாகும். நாகசுரம் என்பதை சரியான பெயராகும். இக்கருவி, வெட்டப்பட்ட **ஆச்சா மரத்துண்டுகளை** நீண்ட நாட்கள் வைத்திருந்த பின்பு உருவாக்கப்படுகிறது.

❖ பழைய வீடுகளில் இருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளை கொண்டு கருவி தயார் செய்யப்படுகிறது.

❖ இதன் மேல் பகுதியில் பொருத்தப்படும் **சீவாளி** என்ற கருவி **நாணல் புல்** வகையை கொண்டு செய்யப்படுகிறது.

❖ **இசை நுணுக்கம்** என்னும் இசை நூலை **சிகண்டி** என்னும் முனிவர் இயற்றினார். அது அநாகுலன் என்னும் பாண்டிய மன்னன் மகன் **சயந்தகுமாரன்** என்பவனுக்கு இசை கற்பதற்காக இயற்றப்பட்டது.

❖ **பஞ்ச மரபு** என்னும் இசைத்தமிழ் இலக்கண நூலை செய்தவர் அறிவனார் என்பவர், வாய்ப்பையும் என்னும் நூலை இயற்றியவர் வாய்ப்பியனார் என்பவர்.

## இசை நூல்கள்

❖ முதுநாரை
❖ முதுகுருகு
❖ பெருநாரை
❖ பெருங்குருகு
❖ பஞ்சபாரதீயம்,
❖ இசை நுணுக்கம்
❖ பஞ்ச மரபு
❖ **இந்திர காளியம்** என்னும் பெயர் உள்ள இசைத்தமிழ் நூலை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உழைப்பாயிரத்தில் கூறுகிறார்

❖ குலோத்துங்க சோழன் இசைக்கலையில் வல்லவன். இவன் இசைத் தமிழ் நூல் ஒன்று ஏற்றி இருக்கிறான்.

❖ இசைத்தமிழ் செய்யுட்ரை கோவை என்னும் பெயர் உள்ள இசைத்தமிழ் நூல் இருந்தது என்பதை யாவரும் களகாரிகை உரைப்பாயிரத்தினால் அறிகிறோம் இசைக்கலை பற்றிய சாசனம் ஒன்றும் காணப்படுகிறது. அச்சாசனத்திற்கு குடுமியான்மலை சாசனம் என்று பெயர் இது மகேந்திரவர்மன் பல்லவனால் எழுதப்பட்டது

❖ இவனுக்கு சங்கீர்த்த சாதி என்னும் சிறப்பு பெயரும் உண்டு. தமிழிசை பாடல்களை இயற்றி தமிழ் இசை உயிர் கொடுத்தவர்கள் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் ஆவார்கள்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ஆண்டாள் இயற்றிய தமிழிசை பாடல்கள் சாகாவரம் பெற்றவை. கீர்த்தனைகள் என்னும் இசை பாடல்கள் மிக பிற்காலத்தில் தோன்றின.

- தமிழ்நாடு கீர்த்தனை விருத்தத்தை ஒம்பியது கீர்த்தனையால் நாட்டுக்கு விளைந்த நலம் சிறிது தீங்கோ பெரிது என்கிறார் திரு.வி.க.

- அருணாச்சல கவிராயர் கவிக்குஞ்சர பாரதியார், கனம் கிருஷ்ணய்யர், ராமலிங்க அடிகள், கோபாலகிருஷ்ண பாரதியார், மாரிமுத்துப்பிள்ளை, மாயவரம் வேதநாயகம் பிள்ளை, முத்து தாண்டவர், அண்ணாமலை ரெட்டியார் ஆகியோர் இசை பாடல்களையும் கீர்த்தனைகளையும் இயற்றி அழியா புகழ் பெற்றனர்.

**அந்நியர் ஆட்சியில் இசைக்கலை**

- கிபி 17 18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் அரசியல் நிலை ஏற்றதாகிவிட்டது தமிழகத்தில் கழகமும் குழப்பமும் ஏற்பட்டன. தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் பல பிரிவினர் பிடித்துக் கொண்டு அரசாண்டனர். இவர்கள் தமிழ் கலையை பற்றி கிஞ்சித்தும் அறியாதவர்கள்.
- இவர்கள் மற்ற கலையை போற்றாதது போலவே இசைத்தமிழையும் போற்றவில்லை. தெலுங்கு பாடல்களுக்கு செல்வாக்கு ஏற்பட்டது.
- கிபி 19, 20–ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது. நூற்றாண்டுகளில் தெலுங்கு பாடல்களே செல்வாக்கு பெற்று விளங்கின.

**தமிழிசையின் மறுமலர்ச்சி**

- தமிழ் இசை பாடல்கள் போற்றப்படாமல் இருந்த நிலையை மாற்றி தமிழ் இசைக்கு மறுமலர்ச்சி உண்டாக்கி கொடுத்தவர் அண்ணாமலை அரசர் ஆவார்.

- இவருக்கு உறுதுணையாக இருந்தவர் ஆர்.கே சண்முகம் செட்டியார் ஆவார். இவர் தமிழிசை சங்கம் அமைத்தும், தமிழிசை கல்லூரி நிறுவியும், இசைத்தமிழ் நூல்களை வெளிப்படுத்தியும் பெருந்துண்டு செய்தார்.

**சமணரும் இசைக்கலையும்**

- சமணர்கள் இசைக்கலையை நன்கு போற்றி வளர்த்தார்கள். சீவக சிந்தாமணியை இசைக்கலை செய்திகளும், ஆடல் பாடல் செய்திகளும், யாழ் என்னும் இசை கருவியின் செய்திகளும் பல இடங்களில் கூறப்படுகின்றன

- பெருங்கதை காப்பியத்தில் உதயகுமரன் பிரம்ம சுந்தர முனிவர் இடத்தில் இசைக்கலையை பயின்றான், என்ற குறிப்பு காணப்படுகிறது. மேலும் கோடபதி என்பவன் யாழ் வாசிப்பதில் வல்லவனாக விளங்கினான் என்ற குறிப்பும், காணப்படுகிறது. உதயனின் யாழிசைக்கு யானைகளும் வசமாயின.

- தமிழில் இலக்கண இலக்கியங்களை எழுதி தமிழ் மொழியை வளர்த்தது போல் இசைக்கலையையும் சமணர்கள் வளர்த்தார்கள்.

**இசை**

- இசை ஏழு வகைப்படும். அவை **குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்** என்பன. இவை தமிழ் பெயர்கள்.

- **மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம்** என்பன வடமொழிப் பெயர்கள்.

**இசைக்கருவிகள் :**

- தோல் கருவி குடமுழா திமிலை (பஞ்சமகா சப்தம்)


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்

**– சம்பந்தர் தேவாரம்**

⇒ நல்லியாழ் மறுப்பின் மெல்ல வாங்கி பாணன் சூடான் பாடினி அணியால்

**– புறநானூறு**

⇒ சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கைய கண்ணானை பாடடேலோர் எம்பவாய்

**– திருப்பாவை**

⇒ சங்கோடு தாரை கானம் தழுங்கொலி முழங்கு பேரி வெங்குரல் பம்பை கண்டை வியன்துடி திமிலை தட்டி

**– பெரியபுராணம்.**

❖ கஞ்ச கருவி சாலரா சேகண்டி.

⇒ கலைஉணக் கிழிந்த முழவுமருள் பெரும்பழம்

**– புறநானூறு**

## இசைக்கருவிகள்

❖ இசைப்பாட்டு, பரதநாட்டியம், கூத்து முதலியவற்றிற்கும் இசைக்கருவிகள் இன்றியமையாதவை இசைக்குரிய ஓசைகள் ஐந்து பொருள்களில் உண்டாகின்றன.

❖ அப்பொருள்கள் தோற்கருவி, துணை கருவி, நரம்பு கருவி, கஞ்ச கருவி, மிடறு என்பன.

❖ பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, சனப்பறை, தமுருகன், தகுநிச்சம், தன்னுமை, தடாரி, முழவு, முரசு போல்வண தோற்கருவிகள் ஆகும்.

❖ புல்லாங்குழல், நாதசுரம், முகவினை, மகுடி, தாரை, கொம்பு, எக்காலை முதலியன துணைக்கருவிகள் ஆகும். இவை மரத்தினாலும், உலோகத்தினாலும் செய்யப்படுவதை.

❖ சங்கு இயற்கையாக உண்டாவது. மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்புகள் ஒட்டப்பட்டவை நரம்புக் கருவிகள் ஆகும்.

❖ யாழ், வீணை, தம்புரா, கோட்டு, வாத்தியம், பிடில் முதலியன நரம்பு கருவிகள் ஆகும். கஞ்ச கருவிகள் வெண்கலத்தால் செய்யப்படுவது.

❖ தாளம், குண்டுதாளம், பிரமதாளம், ஜாலர் முதலியன. மிடறு என்பது மிடற்றிசை என வழங்கப்படும் வாய்ப்பாட்டு ஆகும்.

❖ தமிழிசை கருவியான **யாழ்** பற்றி பல காலம் ஆராய்ந்து யாழ் நூலை இயற்றியவர் விபுலானந்தர் ஆவார்.

பழந்தமிழ் நாட்டில் 36 வகையான முரசுகள் வழக்கத்தில் இருந்ததாக சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**படைமுரசு, கொடைமுரசு, மணமுரசு** என்று மூன்று வகையான முரசுகள் புழக்கத்தில் இருந்தன. மாக்கண் முரசம் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது.

## தமிழர் இசைக்கருவிகள்

இசையானது **குரல்வழி இசை, கருவி வழி இசை** என இரு வகைப்படும் இசைக் கருவிகளை இசைத்து பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்.

> நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கில்
> பாணன் சூடான் பாடினி அணியாள்.
> **– புறநானூறு**

இசைக்கருவிகளின் வகைகள்

| இசைக் கருவி | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **தோல் கருவிகள்** | விலங்குகளின் தோலால் மூடப்பட்டு செய்யப்படும் கருவிகள் | முழவு முரசு |
| **நரம்புக் கருவிகள்** | நரம்பு அல்லது தந்திகளை உடையவை | யாழ் வீணை |
| **காற்று கருவிகள்** | காற்றைப் பயன்படுத்தி இசைக்கப் படுபவை | குழல் சங்கு |
| **கஞ்ச கருவிகள்** | ஒன்றோடு ஒன்று மோதி இசைக்கபடுபவை | ஜாலரா சேகண்டி |

**<u>தோல் கருவிகள்</u>**

**1. உடுக்கை**

தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்

**– சம்பந்தர் தேவாரம்.**

- ✓ இது இடை சுருங்கிய ஒரு கைப்பரையாகும். உடல் பகுதி பித்தளையாலும் வாய்ப்பகுதி ஆட்டு தோலாலும் ஆனது.
- ✓ இரு வாய்ப்பகுதிகளையும் இணைக்கும் கயிறுகள் இடையில் கோர்க்கப்பட்டு இருக்கும் வலது வாய்பகுதி மீது அடித்துதான் ஒலி எழுப்பப்படும்.
- ✓ பெரிய உடுக்கை தவண்டை, என்றும் சிறிய உடுக்கை குடுகுடுப்பை என்றும் அழைக்கப்படுகின்றன.
- ✓ தில்லையில் நடனமாடும் நடராசரின் கைகளில் இது காணப்படுகிறது. இறைவழிபாட்டின் போதும், குறி சொல்லும் போதும், இக்கருவி இசைக்கப்படுகிறது.

**2. குடமுழா**

- ✓ ஐந்து முகங்களை உடைய முரசு வகையை சேர்ந்த இக்கருவி பெரிய கூடத்தின் வடிவில் அமைந்திருக்கும்.
- ✓ ஐந்து வட்ட வடிவ வாய்களுடன் அமைந்துள்ள இதில், நடுவில் உள்ள வாய் மட்டும் ஏனையவற்றை விட பெரியதாக இருக்கும். ஒவ்வொரு வாயிலிருந்தும் ஒரு தனி வகையான இசை பிறக்கும் எனவே இது **பஞ்ச மகா சப்தம்** என அழைக்கப்படுகிறது. கோயில்களில் இக்கருவி இசைக்கப்படுகிறது.

**3. திமிலை**

சங்கோடு தாரை காளம் தழங்கொலி முழங்கு
பேரி வெங்குரல் பம்பை சண்டை
வியன்துடி திமிலை தட்டி

**– பெரியபுராணம்.**

பலாமரத்தினால் செய்யப்பட்டு விலங்கு தோலினால் கட்டப்பட்டுள்ள இக்கருவி மணல் கடிகார வடிவத்தில் இருக்கும். இதன் வேறு பெயர் பாணி ஆகும்.

**4. பறை**

விலங்கு தோலால் இழுத்துக் கட்டப்பட்ட இக்கருவி தற்காலத்தில் **தப்பு** என அழைக்கப்படுகிறது. தற்காலத்தில் பறையை முழங்கிக் கொண்டே ஆடும் ஆட்டம் தப்பாட்டம் எனப்படுகிறது.

- ✓ பழங்காலத்தில் செய்திகளை தெரிவிக்க பயன்பட்டது – **கோட்பறை**
- ✓ பகைவர்களின் ஆநிறையை கவர செல்லும்போது பயன்பட்டது – **ஆகோட்பறை.**

**5. மத்தளம்**

‘மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத
முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தர்க்கீழ்’

**– நாச்சியார் திருமொழி**

**அடியார்க்கு நல்லாரின் விளக்கம்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- ✓ மத்து என்றால் ஓசை. இசை கருவிகளுக்கு எல்லாம் அடிப்படை தளம்.

**மத்து + தளம் = மத்தளம்**

- ✓ இக்கருவியின் நடுப்பகுதி பெருத்தும் கடைப் பகுதிகள் சிறுத்தும் காணப்படுகின்றன.
- ✓ மரத்தால் செய்யப்பட்டுள்ள கருவியின் வாய்ப்பகுதி வளையங்களில் தோல் இழுத்து கட்டப்பட்டிருக்கும்.
- ✓ இரு கைகளாலும் இசைக்கப்படுவதால் இது **முதற்கருவி** எனப்படுகிறது.
- ✓ தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டின் மூலமாக கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக் கலைஞர்களுள் கொட்டி மத்தளம் வாசிப்பவரும் இருந்தார் என்பதை அறிய முடிகிறது.

**6. முரசு**

- ✓ தமிழர்கள் போர் துணையாக கொண்ட கருவிகளுள் முதன்மையானது முரசு ஆகும்.
- ✓ பரந்தமிழ் நாட்டில் படைமுரசு, கொடைமுரசு, மனமுரசு என்று மூன்று வகை முரசு புழக்கத்தில் இருந்தன.
- ✓ சிலப்பதிகாரம் தமிழரிடம் 36 வகையான முரசுகள் இருந்ததாக குறிப்பிடுகிறது மதுரைக்காஞ்சியில் மாக்கான் முரசம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>நரம்புக் கருவிகள்</u>**

**1. யாழ்**

பேரியாழ், செங்கோட்டியாழ் மிகவும் பழமை வாய்ந்தவை.

| யாழ் வகை | நரம்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. பேரியாழ் | 21 நரம்புகள் |
| 2. மீன் வடிவில் அமைந்துள்ள | 19 நரம்புகள் |
| 3. சகோட யாழ் | 14 நரம்புகள் |

யாழின் வடிவமே மெல்ல மெல்ல மாற்றமடைந்து வீணையாக உருமாறியது.

**2. வீணை**

இது ஏழு நரம்புகளை கொண்ட கருவியாகும் இடக்கை விரல்களால் நரம்புகளை தேய்த்து வளத்தை சுண்டு விரலால் கம்பிகளை மீட்டிசை எழுப்புவர் நரம்புகள் மூலம் எழுப்பப்படும் இசையை அதன் குடம் தண்டு முதலில் பாகங்கள் பெருக்கி அனுப்புகின்றன பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர பட்மன் காலத்தில் பரிவாதினி என்ற வீணை வழக்கத்தில் இருந்தது.

**<u>காற்று கருவிகள்</u>**

**1. குழல்**

**குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்.**

**– திருவள்ளுவர்**

- ✓ காடுகளில் வளரும் மூங்கில் வண்டுகள் ஏற்படுத்திய துறைகளின் வழியாக காற்று வீசும் போது உருவான இன்னிசையை கேட்டு மகிழ்ந்து நம் முன்னோர்கள் கருவி உருவாக்கினர். இதனை வேய்ங்குழல் என்றும் புல்லாங்குழல் என்றும் அழைப்பர்.
- ✓ இதில் ஏழு சுரங்களை உண்டாக்குவதற்குரிய ஏழு துறைகள் இருக்கும். இது சுமார் 20 விரல் நீளமுடையது.
- ✓ மூங்கில் மட்டுமின்றி சந்தனம், செங்காளி, கருங்காலி ஆகிய மரங்களாலும் குழல் செய்யப்படுகின்றது.
- ✓ சிலப்பதிகாரம் கொன்றைக் குழல், முல்லை குழல், ஆம்பல் குழல் என்று பல்வேறு வகையான குழல்கள் பற்றி குறிப்பிட்டுள்ளது


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

**2. கொம்பு**

- ✓ தொடக்க காலத்தில் இறந்த மாடுகளின் கொம்புகளை பயன்படுத்தி செய்யப்பட்ட இக்கருவி பிற்காலத்தில் பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்டது.
- ✓ வேடர்கள் வேட்டையின்போதும் கழனிகளை காவல் காப்பவர்கள் காவலின் போதும் இக்கொம்பினை ஊதுவர். தற்போது திருவிழா காலங்களில் ஊர்வலத்தில் ஊதுக்கொம்பு, எக்காலம், சிங்கநாதம், துத்தரி போன்ற பல்வேறு வகையான கொம்புகள் இசைக்கப்படுகின்றன.

**3. சங்கு**

- ✓ இயற்கையாக கடலில் இருந்து கிடைக்கும் இதனை இலக்கியங்கள் **பணிலம்** என்று குறிப்பிடுகின்றன.
- ✓ சங்கின் ஒளி **சங்கநாதம்** எனப்படுகிறது. வளமாக சுழிந்து இருக்கும் சங்கு வலம்புரி சங்கு என்று அழைக்கப்படுகிறது.

**'சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கையக் கண்ணானை பாடேலோர் எம்பவாய்.**

**– திருப்பாவை**

- ✓ சிந்து என்பது ஓசை நயத்துடன் பாடக்கூடிய பாவகை நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலிருந்து தோன்றிய வடிவம். சிலப்பதிகார காலத்தில் இருந்து வழக்கில் இருக்கிறது.
- ✓ சிந்து வகை பாடல்கள் சந்தமும், இயல்பு தொடையும் அமைந்த கண்ணிகளைக் கொண்டவை.
- ✓ கும்மி பாடல்களும், காவடி சிந்து, வழிநடை சிந்து, நொண்டி சிந்து போன்ற சந்தப் பாடல்களும் ஆனந்த களிப்பு, தெம்மாங்கு முதலிய நாட்டுப் பாடல்களும் புதிய பாவடிவங்ககளாக தோன்றியுள்ளன.
- ✓ ஒரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்து பாவகையாகும். பாரதியார் சிந்து வகையினை அதிகமாக கையாண்டு இருக்கிறார்.
- ✓ சிந்து என்பது இசைத்தமிழ் பாகுபாடுகளில் ஒன்று பல்லவி (எடுப்பு) அனு பல்லவி (தொடுப்பு) இன்றிச் சரணங்களுக்குரிய (முடிப்பு) கண்ணிகளுடன் உடைய பாக்கள் சில வகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.
- ✓ சித்தர் பாடல்கள் பல சிந்து வகையில் அமைந்துள்ளன.
- ✓ எடுத்துக்காட்டு:

கடுவெளி சித்தரின் '**பாபம் செய்யாதிரு மனமே**' என்ற பாடல்.

<u>**கஞ்ச கருவி**</u>

**1. ஜாலரா**

பித்தளை அல்லது வெண்கலத்தால் ஆன இதன் உட்புறம் குவிந்திருக்கும், இதன் வேறு பெயர் பாண்டில் ஆகும். இது கோயில் வழிபாட்டின் போதும் இன்னிசை அரங்குகளிலும் இசைக்கப்படும் முக்கியமான கருவியாகும்.

**2. சேகண்டி**

வட்ட வடிவமான மணி வகையை சேர்ந்த இதனை சேமங்கலம் என்றும் அழைப்பர் இது கோயில் வழிபாட்டின் போதும் இறுதி ஊர்வலத்தின் போதும் இசைக்கப்படுகிறது.

<u>**இசை கற்றூண்கள்**</u>

- ✓ மதுரை மீனாட்சி திருக்கோயிலில் 22 மெல்லிய கம்பங்களை உடைய ஐந்து இசை தூண்கள் இருக்கின்றன.
- ✓ நெல்லையப்பர் கோயிலிலும், சுசீந்திரம் கோயிலிலும் இத்தகைய இசை தூண்கள் உள்ளன.
- ✓ புதுக்கோட்டையை சார்ந்த அன்னவாசல் என்னும் ஊரில் ஒரு சமண உருவம்


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

கருங்கலில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை தட்டினால் இனிய இசை உண்டாகிறது.

**குறிப்பு :**

⇒ திங்களன் நிகண்டு என்னும் நூலில் 103 பண்கள் காணப்படுகின்றன.

⇒ பண்கள், பாடும் காலங்களுக்கு ஏற்றவாறு பகல் பண், இரவுப் பண், பொதுப்பண் என்று வகுக்கப்பட்டுள்ளன.

⇒ தேவாரத்தில் 23 பண்களில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. தேவாரத்தில் இல்லாத, திவ்ய பிரபந்தத்தில் மட்டும் காணப்படும் பண்கள் நைவளம், அந்தாளி, தோடி, கல்வாணம், பியந்தை, குறண்டி, முதிர்ந்த இந்தளம்.

⇒ **சாளரபாணி** என்ற பண் ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் காணப்படுகிறது.

⇒ பரிபாடலில் நோதிறம், பாலையாழ், காந்தாரம் முதலிய பண்கள் காணப்படுகின்றன.சைவத் திருமுறைகளில் காரைக்கால் அம்மையார் **'நட்டபாடையிலும்' 'இந்தளத்திலும்'** பாடியுள்ளார்.

## சிற்பம் (கல்லிலே கைவண்ணம்)

**தாராசுரம்**

❖ கலைகளின் விளைநிலம் – சோழவள நாடு

❖ கட்டடக்கலையும், சிற்பக்கலையும் கொழிக்கும் ஊர் – கும்பகோணம்.

❖ கும்பகோணத்தின் தென்புறம் பாய்வது – அரிசிலாறு (அரசலாறு)

❖ அரிசிலாறின் தென்கரையில் – தாராசுரம் உள்ளது.

❖ தாராசுரத்தில் ஐராவதீஸ்வரர் கோயில் உள்ளது.

❖ ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் இராஜராஜ சோழனால் இக்கோயில் கட்டப்பட்டது.

❖ ஒவ்வொரு சிற்பத்திலும் காவியம் பொதிந்துள்ளது.

❖ முப்புரம் எரித்தவன் கதை – திரிபுராந்தகன்

❖ யானை ஊறிப் போர்த்தவர் கதை – கஜம்ஹார மூர்த்தி

❖ அடி முடி தேடவைக்கும் அண்ணாமலையார் – லிங்கோத்பவர்

❖ இராமாயண, மகாபாரத, கதைகள் இறுதி மன்மதன் கதைகள், சிவபுராண கதைகள், அன்னம் பாலிக்கும் அற்புத அன்னபூரணி, கண்ணப்ப நாயனார் என்று சிற்பங்கள் நமக்கு பல கதைகளை எடுத்துரைக்கின்றன.

❖ சிலைகளில் பரதநாட்டிய அடைவுகள் சிறப்பாக செதுக்கப்பட்டுள்ளன. பறவை, விலங்கு, மனிதன் என கலவையாய் அமைந்துள்ளது ஒரு சிற்பம்.

❖ கோயிலில் ஒவ்வொரு தூணின் நான்கு பட்டைகளிலும் சிற்றோவியங்கள் உள்ளன.

❖ கோவில் நுழைவாயிலில் ஏழு கருங்கல்படிகள் **சரிகமபதநி** என்னும் ஏழு நாதப் படிகளாக அமைந்துள்ளன.

❖ மத்தளம், வீணை, நாதசுரம், புல்லாங்குழல், போன்றவற்றின் இசை மழை கோவிலின் உள்ளே நம்மை ஆனந்தப்படுத்துகிறது.

கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன"

www.tnpscgroup4.in

**– திவாகர நிகண்டு**

- சிற்பத்தை உருவாக்கும் 10 உறுப்புகள் குறித்து மணிமேகலையிலும் குறிப்புகள் உள்ளன தற்காலத்தில் சிற்பங்கள் பைஞ்சுதையிலும் (சிமெண்ட்) உருவாக்கப்படுகின்றன.
- கால் சேகன் **(Carl Sagon)** என்ற வானவியல் அறிஞரின் கூற்று, தாராசுரம் கோயிலின் கூம்பிய விமான தோற்றமும், அதற்கு கீழே இருபுறமும் யானைகளும், குதிரைகளும், பூட்டி ரத்தம் போல் அமைந்த மண்டபம் வான்வெளி ரகசியத்தை காட்டுகின்றன.
- 63 நாயன்மார்களின் கதைகளை கூறும் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன.
- தஞ்சை அரண்மனைக்கு சொந்தமான இக்கோயிலை, தற்போது மத்திய தொல்பொருள் துறையினர் பாதுகாத்து வருகின்றனர்.
- யுனெஸ்கோ இக்கோயிலை மரபு அடையாளச் சின்னமாக அறிவித்துள்ளது இக்கோயில் கலைகளின் புகலிடம் ஆகும்.

**மாமல்லபுரம்**

- ஏழாம் நூற்றாண்டை சேர்ந்த மாமல்லபுரம் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில் உருவாக்கப்பட்டது. நரசிம்மவர் **மற்போரில் சிறந்தவர்** ஆதலின் மாமல்லன் என்பது அவருடைய சிறப்புப் பெயராகும். அவர் பெயரால் உருவாக்கப்பட்டது மாமல்லபுரம் ஆகும்.
- அங்கே ஒரே பாறையில் செதுக்கி செய்யப்பட்ட கோயில் ரத வடிவில் உள்ளதால் அது இரதக் கோயில் எனப்படுகிறது. ஐந்து ரதங்கள் உள்ளதால் பஞ்சபாண்டவர் ரதம் எனவும் அழைக்கப்படுகிறது
- அர்ஜுனன் தபசு என்ற பாறையில் மனிதர்கள், விலங்குகள், பறவைகள் போன்ற சிற்பங்கள் மிகவும் உயிரோட்டமாக அமைந்துள்ளன. அவை புடைப்புச் சிற்பங்கள் எனப்படுகின்றன. அப்பாறையில் ஆகாய கங்கை பூமிக்கு வருவது போல் அமைக்கப்பட்டுள்ள தளத்தில் மழைக்காலங்களில் மழைநீர் பாய்ந்து வருவது உண்மைகளை அகற்றி ஒடி வருவதைப் போல் இருக்கும்.

**<u>சிற்பக்கலை நான்கு வகைப்படும்</u>**

- குடைவரைக் கோயில்கள்
- கட்டுமான கோயில்கள்
- ஒற்றைக்கல் கோயில்கள்
- புடைப்புச் சிற்பங்கள்

இந்த நான்கு வகைகளும் காணப்படும் ஒரே இடம் மாமல்லபுரம்.

**<u>சிற்ப வகைகள்</u>**

சிற்பங்கள் உருவ அமைப்பு முறையில் இரண்டு வகைப்படும்.

**1. முழு உருவ சிற்பங்கள்**

உருவத்தின் முன் பகுதியும் பின்பகுதியும் தெளிவாக தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழு உருவ சிற்பங்கள் ஆகும்.

**2. புடைப்புச் சிற்பங்கள்**

- முன்பகுதி மட்டும் தெரியும் படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்பு சிற்பங்கள் எனப்படும்.
- இத்தக சிற்பங்கள் கோயில்களில் தரைப்பகுதி, கோபுரம் தூண்கள், நுழை வாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள், அரண்மனைகளில் காணப்படும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழு வடிவ உருவங்களை உலோகத்தினாலும், கல்லினாலும் சிற்ப இலக்கணம் மரபை பின்பற்றி சிற்பிகள் வடிவமைப்பதால் அவர்களை **'கற்கவிஞர்கள்'** என சிறப்பிக்கின்றனர்.

**பல்லவர் கால சிற்பங்கள்**

பல்லவர் கால சிற்பங்கள் கதையினாலும், கருங்கற்களினாலும் அமைக்கப்பட்டன. கோயில் தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர் நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் பொறிக்கப்பட்டன.

கோயில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள், என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிகுந்தன.

**எடுத்துக்காட்டு :**

- மாமல்லபுர சிற்பங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில், காஞ்சி வைகுந்த பெருமாள் கோயில், பல்லவர் கால குடைவரைக் கோயில்கள்.
- பல்லவர் கால குடைவரை கோவில் நுழைவாயிலின் இரு புறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

**பாண்டியர் கால சிற்பங்கள்**

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோள்களில் சிற்ப வேலைபாடுகள் நிறைந்துள்ளன.

**எடுத்துக்காட்டு :**

- திருமயம் பிள்ளையார்பட்டி, குன்றக்குடி திருப்பரங்குன்றம், முதலிய இடங்களில் உள்ள கோயில்கள் மற்றும்,
- கோவில்பட்டி மேற்கு கழுகுமலை வெட்டுவான் கோயிலில் அமைந்துள்ள சிற்பங்கள்.

**சோழர் கால சிற்பங்கள்**

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை சோழர் காலத்தில் விரிவாக வளர்ச்சி பெற்றது.

**எடுத்துக்காட்டு**

- முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சை பெரிய கோயிலில் காணப்படுகின்ற 14 அடி உயரம் உள்ள வாயிற் காவலர் உருவங்கள் மிகப்பெரிய நந்தி வியப்பூட்டும் வேலைபாடுகள் கொண்ட தூண்கள்.
- முதலாம் இராசேந்திர சோழன் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவகிரகம், சிங்கமுக கிணறும், அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள்.
- இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதேஸ்வரர் கோயில் இரண்டாம் குலோத்துங்க சூழல் அமைத்த திரிபுவன வீரேஸ்வரம் கோயில். புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் அமைந்த சிற்பங்கள்.
- புதுக்கோட்டை மாவட்டம் கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தக சோழனால் கட்டப்பட்ட மூவர் கோயில் சிற்பங்கள்.
- திருச்சி மாவட்டம் சீனிவாசநல்லூரில் உள்ள குரங்குநாதர் கோயில் சிற்பங்கள். இக்கோயில் ஆதித்த சோழனால் கட்டப்பட்டது.
- சோழர் கால இறுதியில் திருவரங்க கோயில் நூல் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்கால சிற்பக்கலை நுட்பத்திற்கு சிறந்த சான்றாகும்.
- சோழர் காலத்தில் தான் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவவமைக்கப்பட்டன.

www.tnpscgroup4.in

எனவே சோழர் காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எனப்படுகிறது.

**விஜயநகர மன்னர் கால சிற்பங்கள்**

- இவர்கள் காலத்தில் உயர்ந்த கோபுரங்களும் அவற்றில் சுதைகளால் ஆன சிற்பங்கள் மிகுதியாகவும் உருவாக்கப்பட்டன.
- இவர்கள் தெலுங்கு, கன்னட பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்த காரணத்தினால் அந்நாட்டு சிற்பக்கலையின் தாக்கம் தமிழக சிற்பங்களில் ஏற்பட்டது.
- கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத் தூண்கள் இசைக் கற்றூண்கள் ஏற்படுத்தப்பட்டன.
- ஆடை அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள், குதிரையின் மீது வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன் கால்களை துாக்கி நிற்பது போன்ற காட்சிகள் சிற்பங்களில் இடம்பெற்றன.

**நாயக்கர் கால சிற்பங்கள்**

**எடுத்துக்காட்டு**

- மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டப தூண்களில் அமைந்துள்ள கண்ணப்பர், குறவன் குறத்தி சிற்பங்கள் ஆடை ஆபரணங்கள் அணிந்து அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்கள் மற்றும் இறந்த மைந்தனை கையில் இந்திய படி நிற்கும் சந்திரமதியின் சிலை.
- கிருஷ்ணபுரம் வெங்கடாஜலபதி கோயிலில் உள்ள குறவன், குறத்தி, ரதிதேவி சிலைகள், ராமேஸ்வரம் பெருங்கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோயில் ஆகிய இடங்களில் உள்ள சிற்பங்கள்.
- கோவை அருகே உள்ள பேரூர் சிவன் கோயிலில் உள்ள சிற்பங்கள், நாயக்கர் கால சிற்பக்கலை நுட்பத்தின் உச்சநிலை படைப்பாகும்.

**பௌத்த சிற்பங்கள்**

புத்தரின் அமர்ந்த, நின்ற, படுத்த கிடைநிலைகளில் சிற்பங்களை படைத்தனர்.

**சமண சிற்பங்கள்**

- அருக கடவுளின் உருவம், 24 தீர்த்தங்கரர் உருவங்களை சிற்பங்கள் ஆக்கினர். சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையன.

**எடுத்துக்காட்டு :**

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அன்னையில் உள்ள திருநாதர் குன்று என்னுமிடத்தில் ஒரு பாறையில் 24 தீர்த்தங்கரர் உருவங்களின் புடைப்புச் சிற்பங்கள்.
- மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் மலை பாறைகள்.

**தொன்மைச் சான்றுகள்**

தமிழின் தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

- போரில் விழுபுண் பட்டு இறந்த வீரருக்கு அமைக்கப்படும் நடுக்கலில் வீரரின் உருவம் பொறிக்கப்படும்.
- சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு சிலை வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

❖ சுதை சிற்பங்கள் சுண்ணாம்பு கலவை மாளிகைகளில் இருந்ததை மணிமேகலை குறிப்பிடுகின்றது.

❖ மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக் கல்லூரி உள்ளது. சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோக படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

❖ சென்னையிலும், கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின் கலை கல்லூரிகளில் சிற்பக்கலையை பகிரலாம்.

❖ தமிழ் நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் **சிற்பச்சென்னூல்** என்ற நூலை வெளியிட்டுள்ளது.

## கட்டடக்கலை

### தஞ்சை பெரிய கோயில்

✓ தஞ்சை பெரிய கோயில் நம் நாட்டில் உள்ள கற்றளி கோயில்களிலே பெரியது, உயரமானது ஆகும்.

✓ இக்கோயில் விமானம் 216 அடி கருவறை விமானம் 13 தலங்களை உடையது. 13 தளங்களை உடைய கருவறை விமானத்தின் மேல் **எண்பட்டை** அமைப்பில் ஆரஞ்சு பழச் – சுளை போன்று எட்டு கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டுள்ளன. அது **பிரமந்திரக் – கல்** எனப்படுகிறது.

✓ கோபுரம் என்பது வாயில்களின் மேல் அமைக்கப்படுவது. விமானம் என்பது அகநாளிகையின் மேல் அமைக்கப்படுவது. அகநானழிகை என்றால் **கருவறை** என்பது பொருளாகும்.

✓ பெரிய கோயிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் வாயில் கோபுரம் கி.பி 988–ல் முதலாம் இராசராசன் சேர நாட்டை வெற்றிகொண்டதை போற்றும் வகையில் இப்பெயர் இட் பட்டுள்ளது.

✓ இந்திய கட்டடக்கலைப் பாணி **நாகரம், வேசரம், திராவிடம்** என்று மூன்று வகைப்படும். அதில் தஞ்சை கோயில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப் பாணியாகும்.

✓ தஞ்சை பெரிய கோயிலை முதலாம் இராசராசன் தான் கட்டினான், என்பதற்கான ஆதாரங்களை கல்வெட்டுகளை தீவிரமாக ஆராய்ந்து கண்டறிந்தவர் **ஜெர்மனி அறிஞர் சீல்ஸ் (1866** ஆம் ஆண்டு) ஆவார்.

✓ இக்கோயிலின் கருவறையின் இரு தளங்களில் உள்ள சுற்றுக்கூடம், சாந்தார நாழிகை பகுதி சுவர்களில் ஓவியங்கள் காணப்பட்டதை கண்டறிந்தவர் 1930–ல் சிதம்பரம் அண்ணாமலை பல்கலத்தில் விரிவுரையாளராக பணியாற்றிய **எஸ்.கே கோவிந்தசாமி** அவர்கள் அந்த ஓவியங்கள் பிரஸ்கோ வகை ஓவியங்கள் ஆகும்.

✓ அந்த சோழர் கால ஓவியங்கள் மீது நாயக்கர் ஆட்சியில் வேறு ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததையும், கண்டறிந்து வெளியுலகத்திற்கு கோவிந்தசாமி அவர்களே தெரியப்படுத்தினார்.

✓ வெளி கோபுரத்தை உயரமாகவும் உட்கோபுரத்தை உயரம் குறைவாகும் என்ற முறையில் இரண்டு கோபுரங்களை கட்டும் புதிய மரபை தோற்றுவித்தவன் முதலாம் ராஜராஜன்அதனை திருவாயில் என்பார்கள்.

✓ கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம், திரிபுவனம் ஆகிய இடங்களில் இரு வாயில்கள் உள்ளன. நான்கு புறங்களிலும் நான்கு கோபுரங்கள் எழுப்ப பெரும் மரபு

www.tnpscgroup4.in

இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் தொடங்கியது.

- ✓ புகழ்பெற்ற கோயில்கள் பலவற்றிலும் மிக உயர்ந்த கோபுரங்களை எழுப்பியது விஜயநகர பேரரசு.

**எடுத்துக்காட்டு:**

- ✓ காஞ்சி, தில்லை, திருவண்ணாமலை, திருவரங்கம், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கோபுரங்கள் 150 அடிக்கு மேல் உயரம் உள்ளவை.

**ராசராசன் காலத்தில் பெண் அதிகாரிகள் இருந்ததை பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகள்:**

- ✓ முதலாம் இராசராசனின் பட்டத்தரசி லோகமா தேவி திருவையாற்றில் கட்டிய லோகமாதேவி வீச்சுரம் கோயில் கல்வெட்டில்,

“உடன் கூட்டத்து அதிகாரம் செய்கிற

கோவலுார் உடையான் காடன்

நூற்றென்மரையும் அதிகாரிச்சி

எருதந் குஞ்சா மல்லியையும்”

- ✓ என்று காணப்படுகிறது. “**எருதன் குஞ்சா மல்லி**” என்பவர் பெண் அதிகாரி. இதே போல் சோமையன் அமிர்தவல்லி என்ற பெண் அதிகாரி முதலாம் இராசாதி ராசன் காலத்தில் இருந்தது பற்றி அக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- ✓ கற்களே கிடைக்காத காவிரி சமவெளி பகுதியில் உயரமான கற்கோயில் எழுப்பிய முதலாம் இராசராசன் புதிய மரபு படைத்தவன். தொடக்க காலத்தில் கோயில்கள் மண்ணால் கட்டப்பட்டு மேலே மரத்தால் சட்டமிட்டார்கள். பின்னர் அதன் மேல் செப்பு, பொன் தகடுகளால், கூரை வேய்ந்தார்கள்.

**எடுத்துக்காட்டு :**

தில்லை கோயில், குற்றாலநாதர் கோயில்.

- ✓ அடுத்த நிலையில் செங்கற்களை அடுக்கி கோயில் கட்டினார்கள். அந்த வகையில் சோழன் சிங்கனான் 78 கோயில்களை கட்டிருப்பதாக திருநாவுக்கரசர் பதிகம் ஒன்றில் கூறியுள்ளார்.
- ✓ பின்னர் ஏழாம் நூற்றாண்டில் பல்லவர்கள் காலத்தில் கருங்கற்களை அடுக்கி கோயில் கட்டினார்கள் அதற்கு கற்றளி என்று பெயராகும். இவ்வடிவம் இரண்டாம் **நரசிம்மவர்மன் இராசராச சீமான்** உருவாக்கியதாகும்.

**எடுத்துக்காட்டு :**

- ✓ மகாபலிபுரம் கடற்கரை கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், பனைமலை கோயில். முழுமையாக கற்களைக் கொண்டே கட்டப்பட்ட மிகப்பெரிய கோயில் தஞ்சை பெரிய கோயில்.
- ✓ செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம்ம ஈஸ்வர, விஷ்ணுகளுக்கு **விசித்திர சித்தன்** என்று அழைக்கப்பட்ட முதலாம் மகேந்திர வர்ம பல்லவன் குடைவரை கோயில்களை அமைத்ததாக மண்டகப்பட்டு கல்வெட்டு கூறுகிறது.
- ✓ இராசசிம்மன் அமைந்த காஞ்சி கைலாசநாதர் கோயில் இராசசிம்மேச்சுரம் என்று அழைக்கப்படுகிறது.
- ✓ அக்கோயிலே முதலாம் இராசராசன் தஞ்சை பெரிய கோயிலை கட்டுவதற்கு தூண்டுகோலாக அமைந்தது.

**குறிப்பு:**

“கட்டடக்கலை என்பது உறைந்து போன இசை”

**– பிரடிக்கா ஒன்ஸ் லிவிங்**

**ப்ரெஸ்கோ ஓவியங்கள்**

- ✓ பிரஸ்கோ என்ற இத்தாலிய சொல்லுக்கு புதுமை என்பது பொருளாகும்.
- ✓ சுண்ணாம்பு காரை பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழமையான ஓவியக்கலை நுட்பம் இது.
- ✓ இவ்வகை ஓவியங்களை அஜந்தா எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களிலும் காணலாம்.
- ✓ தஞ்சை பெரிய கோயில் உள்ள கல்வெட்டில் **நாம் கொடுத்தனவும்,**
  **நம் அக்கண் கொடுத்தனவும்,**
  **நம் பெண்டுகள் கொடுத்தனவும்,**
  **கொடுப்பார் கொடுத்தனவும்,**
  இந்த கல்லிலே வெட்டி அருள்க... என பொறிக்கப்பட்டுள்ளது.
- ✓ நாம்– இராசராசன்
- ✓ அக்கன் தமக்கை– குந்தவை தேவி
- ✓ பெண்டுகள்– இராசராசனின் மனைவிகள்
- ✓ கொடுப்பார்– பிற மக்கள்

**ஓவியக்கலை**

- ✓ காண்பவரை கவர்ந்திழுத்து உள்ளங்களை தன் வயப்படுத்தும் உயர்ந்த கலை ஓவியக்கலை.
- ✓ ஓவியக்கலை ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், பாடம், வட்டிகைச் செய்தி என பல பெயர்களால் அழைக்கப்பட்டது.

**கோட்டோவியங்கள்**

- ✓ நேர்கோடு, கோணக்கோடு, வளைக்கோடு, போன்றவற்றால் வரையப்படுபவை கோட்டோவியங்கள் ஆகும்.

**புனையா ஓவியம்**

- ✓ புனையா ஓவியம் கடுப்பபுனைவில்

**– நெடுநல்வாடை**

- ✓ பனையா ஓவியம் புறம் போந்தன்ன

**– மணிமேகலை**

**வரை கருவிகள்**

வண்ணம் தீட்டும் கோலானது தூரிகை, துகிலிகை வட்டிகை எனப்பட்டது. வண்ணங்கள் குழப்பம் பலகை வட்டிகை பலகை எனப்பட்டது.

**புனையா ஓவியம்**

வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவத்தை மட்டும் வரைவதற்கு துணையா ஓவியம் என்று பெயர். நடைமுறையில் இன்றும் இது மென்கோட்டு (ஸ்கெட்ச்) ஓவியமாக உள்ளது. ஓவியத்திற்குரிய கருப்பொருள்கள் இயற்கை காட்சிகள், கற்பனை காட்சிகள் சமுதாய வாழ்க்கை முறைமை, இதிகாச புராணக் கதைகள் ஆகியவை.

**பழங்கால ஓவியங்கள்**

கி.மு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தோர், தாம் தங்கிய மலை குகைகளிலும், பாறைகளிலும் ஓவியங்களை கீறி எழுதினர். இவை தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சித்தன்னவாசல் ஓவியங்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர் காலத்து ஓவியங்களும் அதன் பின்னர் வந்த நாயக்க மன்னர் கால ஓவியங்களும் பழங்கால ஓவியங்களாக கருதப்படுகின்றன.

**இன்ன பல பல எழுத்து நிலை மண்டபம்**
**துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்**

**– பரிபாடல்**

இப்பாடலின் மூலம் ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கி கூறினர் என்ற செய்தியை அறிய முடிகிறது.

**ஓவிய வரைவிடங்கள்**

**ஓவியக்கூடம்**

- ✓ எழுத்தெழில் அம்பலம், எழுத்து நிலை மண்டபம், சித்திர அம்பலம், சித்திரக்கூடம், சித்திர மாடம், சித்திர மண்டபம், சித்திர சபை.
- ✓ மேலும் அரண்மனை அந்தபுரங்கள், செல்வர் வாழும் மலைகள், மாளிகைகள், ஆடல் அரங்குகள், கோயில் மண்டபங்கள், பொது மன்றங்கள் போன்ற இடங்களிலும் கட்டட சுவர்கள் மேற்கூரைகள் தூண்களிலும் ஓவியங்களை வரைந்தனர்.

**கருத்துப்படம்** என்பதை முதன் முதலில் **இந்தியா** என்ற இதழில் பாரதியார்தான் அறிமுகப்படுத்தினார். பின்னாலில் அது கேலிச்சித்திரம் எனப்பட்டது.

**தமிழருக்கே உரிய ஓவிய மரபுகள்**

- ✓ **மனித இயல்புகள்**
  நிற்றல், இருத்தல், கிடத்தல்
- ✓ **மெய்ப்பாடுகள்**
  வீரம், சாந்தம், சினம், வியப்பு, உவகை.
- ✓ **அளவுகள்**
  உத்தமம், மத்திமம், அதமம், மற்றும் தசதாளம், நவதாளம், பஞ்சதாளம்.

**ஓவிய கலைஞர்கள்**

ஓவியக் கலைஞர்கள், ஓவியர், ஓவியப் புலவர், கண்ணுள்வினைஞர், சித்திரக்காரர், வித்தக வினைஞன், வித்தகர், கிளவி வல்லோன் எனப்பட்டனர். ஆண் ஓவியர் **சித்ராங்கதன்** எனவும், பெண் ஓவியர் **சித்திரசேனா** எனவும் அழைக்கப்பட்டனர்.

**<u>தமிழர்களின் ஓவியக்கலை</u>**

தமிழகத்தின் 25க்கும் மேற்பட்ட இடங்களில் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்னரே ஓவியங்கள் வரைவதற்கான சான்றுகளை பரிபாடல், குறுந்தொகை பாடல் வரிகள் மூலமாக நாம் அறியலாம்.

**நடுகல் வணக்கம்**

- ⇒ தொல்காப்பியம் நடுகல் வணக்கம் பற்றி கூறுகிறது.
- ⇒ நடு கல்லில் போரில் வீரமரணம் எழுதிய வீரன் அது உருவம் பெயர் பெருமைக்குரிய செயல் முதலியனவற்றை பொறிக்கும் பழக்கம் இருந்தது.
- ⇒ பண்டைத் தமிழர் ஓவியங்களை '**கண்ணெழுத்து**' என்றே வழங்கியுள்ளனர். சிற்பி தான் செதுக்கவிருக்கும் உருவத்தை முதலில் வரைந்து பார்த்த பின்னரே அவ்வோவியத்தை கொண்டு கல்லில் உருவம் அமைத்தல் மரபு.
- ⇒ ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்று புலமை பெற்றவர்கள் ஓவியக் புலவன் எனப்பட்டனர்.
- ⇒ ஓவியக்கலைஞர் குழுவை ஓவிய மக்கள் என்று அழைத்தனர்.
- ⇒ நச்சினார்க்கினியார் தம் உரையில் ஓவியருக்கு, '**நோக்கினார் கன்னடத்தை தம் தொழில் நிறுத்துவோர்**' என இலக்கணம் வகுத்துள்ளார். ஓவியக் கலைக்கென தனி இலக்கண நூல்கள் இருந்தன.

**எடுத்துக்காட்டு :**

சிலப்பதிகாரத்தில் மாதவி பற்றி குறிப்பிடும் போது ஓவியச் **'செந்நூல் உரை – நூற்கிடக்கையும் கற்றுத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்"**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

⇒ புறநானூற்றில் **'ஓவத்தனைய இதனுடை வனப்பு'** என வீட்டின் அழகை ஓவியத்திற்கு ஒப்புமையாக கவிஞர் போற்றுகிறார்.

⇒ சுடுமண் சுவர் மீது வெண்சுதை சுண்ணாம்பு பூசி செஞ்சாந்து கொண்டு ஓவியங்கள் தீட்டினர்.

⇒ நாடகம் மேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரை சேலைகள் தொங்கவிடப்பட்டிருக்கும். அது ஓவிய எழினி எனப்பட்டது.

⇒ ஓவியர்கள் **சோதிடக்கலை, வான நூல் கதைகள்** முதலில் கற்றுணர்ந்து ஓவியம் தீட்டினர்.

⇒ ஆடும் முதலான 12 ராசிகளையும் இன்மீன்களையும் வரைந்த செய்தி நெடுநல்வாடையில் கூறப்பட்டுள்ளது.

⇒ சங்க காலத்தில் செலுத்தி இருந்த ஓவியக்கலை இடைக்காலத்தில் சிதைந்து மறைந்து போக தொடங்கியது.

⇒ மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டியவர்கள் பல்லவ பேரரசர்கள்.

⇒ ஓவியக் கருப்பொருள்கள் இயற்கை காட்சிகள் கற்பனை காட்சிகள் சமுதாய வாழ்க்கை முறை இதிகாச புராணக் கதைகள்.

**<u>முதலாம் மகேந்திரவர்மன்</u>**

⇒ கி.பி ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னனாக இருந்த முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன் காலத்தில் ஓவியக்கலை உன்னத நிலையை எட்டியது இம்மன்னனே.

⇒ சிறந்த ஓவியனாக புகழ்பெற்றிருந்தான். சித்திரக்கார புலி என்று புகழப்பட்டான்.

⇒ தட்சிண சித்திரம் என்ற ஓவிய இலக்கண நூலுக்கு இம்மன்னன் உரை எழுதியுள்ளான்.

⇒ பல்லவர் கால ஓவியங்கள் பனைமலை, திருமலை மாமல்லபுரம், மாமண்டூர், காஞ்சி கைலாசநாதர் கோயில் முதலிய இடங்களில் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

⇒ பார்வதி, கின்னரர், கின்னறி, கந்தர்வர் ஓவியங்கள் காண்போரை மயக்குவன. சேரர் கால ஓவியங்கள் திருநந்தி கரையில் கிடைத்துள்ளன.

⇒ **குறிப்பு :**

- ✓ ஐரோப்பிய கலை நுணுக்கத்துடன் இந்தியக் கதை மரபுகளை இணைத்து ஓவியங்களில் புதுமைகளை புகுத்தியவர் இராஜா இரவிவர்மா.
- ✓ நாட்காட்டி ஓவியம் வரையும் முறையின் முன்னோடிகளுள் ஒருவர் கொண்டயர் ராஜு. நாட்காட்டி ஓவியங்கள் **பசார் பெயிண்டிங்** எனப்பட்டன.

**<u>சித்தன்னவாசல் ஓவியங்கள்</u>**

⇒ புதுக்கோட்டை அருகே சித்தன்னவாசல் என்னும் குகை ஓவியங்கள் காணப்படுகின்றன.

⇒ கி.பி 9–ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த மன்னன் அவனி சேகர ஸ்ரீவல்லப்பன் காலத்தில் வாழ்ந்த மதுரை ஆசிரியர் இளம் கௌதமன் இவ்–வோவியங்களை வரைந்தார் என கல்வெட்டு செய்தி அறிவிக்கின்றது.

⇒ அங்குள்ள தாமரை தடாகம், ஆடல் அணங்குகள், அரசன், அரசி ஓவியங்கள் நம் கண்ணை கவர்கின்றன.

⇒ ஓவியம் வரைவதற்கு பயன்படும் துணி எழினி திரைச்சீலை கிளி படம் எனப்பட்டன.



www.tnpscgroup4.in

⇒ சீவக சிந்தாமணியில் குணமாலை என்னும் தலைவி யானையை கண்டு அஞ்சிய காட்சியை சீவகன் துணியில் வரைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

⇒ தற்காலத்தில் துணை ஓவியங்கள் **'கலம்காரி'** ஓவியங்கள் எனப்படுகின்றன.

**சோழர் கால ஓவியங்கள்**

⇒ சோழர்கால வனப்புமிக்க ஓவியங்கள் தஞ்சை பெரிய கோயிலில் காணப்படுகின்றன. அவற்றில் உள்ள கவின்மிகு கயிலை காட்சி, சேரமான், சுந்தரர் கயிலை செல்லும் காட்சி, சிவபெருமான் முப்புறம் எரித்த காட்சி, சுந்தரரை தடுத்தாலும் கோலம் நாட்டிய மகளிர் மாமன்னன் ராசராசன் கருவூர் தேவர் முதலிய ஓவியங்கள் வரலாற்றுச் சிறப்பை உணர்த்துவன.

⇒ நாயக்கர் கால ஓவியங்கள் திருவரங்கம், திருப்பதி, தில்லை, திருவாரூர், குடந்தை, மதுரை, காஞ்சி முதலிய இடங்களில் நாயக்கர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன.

⇒ மகாராஷ்டிரா மன்னர்கள் கால ஓவியங்கள் கி.பி பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சை ஆண்ட மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஓவியக்கலை நன்கு வளர்ச்சி பெற்றது.

⇒ ஓலைகளிலும் கண்ணாடிகளிலும் தந்தங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டன. வண்ணங்களின் வனப்புக்கு ஏற்ப இரத்தினங்கள் பதிக்கப்பெற்றன.

**பேச்சுக்கலை**

⇒ ஆயக்கலைகள் 64 என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்களையும் ஒன்று. இது நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைய தக்க அரியதொரு கலை.

⇒ இது மக்களுக்கு அறிவைப் புகட்டி அவர்களை உயர்ந்த லட்சிய பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையது.

⇒ மேடைப்பேச்சில் மக்களை ஈர்த்தவர் திரு.வி.க, பேரறிஞர் அண்ணா, ரா.பி சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், குன்றக்குடி அடிகளார் முதலியோர்.

⇒ பேச்சின் முக்கூறுகள் எடுத்தல், தொடுத்தல், முடித்தல்.

**எடுத்தல்**

பேச்சை தொடங்குவது எடுத்தல் ஆகும். தட்டு தடங்கல் இன்றி கேட்போரை வயப்படுத்தும் வகையிலும் அவையோறை விழித்து சுருக்கமான முன்னுரையாடும் சூழலுக்கு ஏற்றவாறு பேச வேண்டும்.

**தொடுத்தல்**

பேச்சின் இடைப்பகுதி தொடுத்தல் ஆகும் இடையிடையே சுவைமிக்க சொற்களையும் கருத்துகளையும் பிணைத்து பேசுதல் ஆகும்.

**முடித்தல்**

✓ பேச்சாளர் கருத்துக்கு அவையூர் இணங்குவதும் மாறுபடுவதும் அவர் தம் பேச்சின் முடிவுரையை பொருத்தே அமையும்.

✓ பேச்சின் சுருக்கத்தை கூறி முடித்தல், உணர்ச்சியை தூண்டும் முறையில் முடித்தல், பாராட்டி முடித்தல் பொருத்தமான கவிதைகளை கூறி முடித்தல் என பல்வேறு வகைகள் உள்ளன.



www.tnpscgroup4.in

- ✓ மேடைப் பேச்சுக்கு கருத்துகளே உயிர் நாடி. இருப்பினும் அக்கருத்துக்களை வெளியிடும் மொழியும் முறையும் இன்றியமையாதன.
- ✓ சொற்களை ஆராய்ந்து அளவாக பேச வேண்டும். சுவையுடன் நிழல் பட தெளிவாக கருத்துக்களை கூற வேண்டும்.
- ✓ பேச்சாளர் தான் உணர்ச்சிவயப்படாமல் கேட்போர் உள்ளத்தில் தான் விரும்பும் உணர்ச்சியை ஏற்படுத்தும் வண்ணம் பேச வேண்டும்.
- ✓ பேச்சு இடையே உவமைகள், சான்றுகள், சிறு சிறு கதைகள், முதலியன அமைய பேசுவதே சிறந்த பேச்சாகும்.

## திரைப்படக்கலை

### கண்டுபிடிப்புகள்

- ✓ அடிப்படை – கி.மு 65–ல் '**லூகரீ ஷெஸ்**' என்ற ரோமானிய கவிஞர் நம் கண்களில் தோன்றுகின்ற பார்வை நிலைப்பு என்ற பண்பு பற்றி கண்டறிந்தார்.
- ✓ 200 ஆண்டுகள் கழிந்த பின்பு '**டாலமி**' என்ற வானவில் அறிஞர் பண்பினை பரிசோதனை மூலம் மெய்ப்பித்தார் திரைப்படம் உருவாவதற்கு இதுதான் அடிப்படையான கண்டுபிடிப்பாகும்.
- ✓ கருத்து படத்தை தயாரிக்க தொடங்கியவர் வால் டிஸ்னி ஆவார்.
- ✓ 1830–ல் போட்டோ எடுக்கும் முறையை கண்டுபிடித்த பின்னர் இயக்கத்தை படம் பிடிக்க முயன்றார் '**எட்வர்ட் மைபிரிட்ஜ்**' என்ற ஆங்கிலேயர். ஓடும் குதிரையின் இயக்கத்தினை முதன் முதலில் படம் பிடித்தார்.
- ✓ **ஈஸ்ட் மென்** என்பவர் சுருள் சுருளாக பிலிம் தயாரிக்கும் முறை கண்டுபிடித்தார்.
- ✓ நாளடைவில் இக்கண்டுபிடிப்புகள் வளர்ந்து எடிசன் 1893–ல் கிளிட்டோஸ் கோப்பு கருவியை கண்டுபிடித்தார்.
- ✓ 1894–ல் அமெரிக்க குமாஸ்தா **பிரான்சிஸ் ஜென்கின்ஸ்** என்பவர் ரிச்மண்ட் என்னும் இடத்தில் இயக்க படத்தை பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார்
- ✓ நவீன ப்ரொஜெக்டர்கள் உருவாக இவருடைய கருத்துகளே அனுப்ப அடிப்படையாக அமைந்தன.
- ✓ ஊமை படங்கள் பேசும் படங்களாக மாறுவதற்கு பல்வேறு அறிவியல் அறிஞர்கள் அயராது உழைத்தனர். அதனால் திரைப்படத்துறை வளர்ச்சி அடைந்தது.
- ✓ கதை வசனம் பாடல் முதலின தயார் செய்யப்பட்டு பாத்திரங்களுக்கு ஏற்ற நடிகர்கள் தேர்வு செய்யப்பட்டனர் இயக்குனர் தலைமையில் திரைப்படங்கள் எடுக்கப்பட்டன.
- ✓ நடிப்பாற்றலை எடுத்துக் கூறி சில நேரங்களில் தாமே நடித்தும், காட்சிகளை அமைத்தும், படம் முடியும் வரை உழைக்கும் நுண்மான் நுழைப்புலம் உடையாரை இயக்குனர் என்பர்.
- ✓ ஒரு மொழி படத்தை மற்ற மொழிகளில் மாற்றியமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயர். மக்களை தன் பால் ஈர்க்கும் ஆற்றல் கொண்டது திரைப்படம்.
- ✓ **கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் கழிப்பே** என்னும் வரிகள் இந்நாள் திரைப்படத்திற்கும் பொருந்தும்.
- ✓ மக்களிடம் மிக எளிதில் சென்று சேரும் ஆற்றல் திரைப்பட ஊடகங்களுக்கு உண்டு.



www.tnpscgroup4.in

அதனால் அது மக்களிடையே பெரும் புகழும் பெற்ற திகழ்கிறது.

- ✓ திரைப்படக் காட்சி திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒலி, ஒளி படக்கருவி இருக்கும்.
- ✓ இக்கருவியில் வட்டமான இரு பெட்டிகள் மேற்பக்கம் ஒன்றும் அடி பக்கம் ஒன்றும் இருக்கும். காட்ட வேண்டிய படச்சுருளை மேல் பெட்டியில் பொருத்துவர்.
- ✓ படச்சுருளை கருவில் உள்ள பரீட்சக்கரங்களுக்கு இடையில் செலுத்தி கீழே உள்ள பெட்டியில் மீண்டும் சுற்றிக்கொள்ளுமாறு செய்வார்.
- ✓ ஒளிமிகு விளக்குகளுக்கும் உருப்–பெருக்கிகளுக்கும் இடையில் படம் வரும். உறுப்பெருக்கின் முன் நிற்கும் மூடிக்கு இரண்டு கைகள் உண்டு.
- ✓ அந்த மூடி நொடிக்கு எட்டு முறையும் அதன் கைகள் நொடிக்கு 16 முறையும் சுழலும் அதன் கைகள் ஒளியை மறைக்கும் பொழுது படச்சுருள் நழுவி அடுத்த படம் வந்து நிற்கும் அதற்குள் மூடி திறந்து விடுவதால் அப்படம் திரையில் விழும்.
- ✓ ஒரு மொழி படத்தை மற்ற மொழிகளில் மாற்றியமைக்கும் முறைக்கு மொழிமாற்றம் என்று பெயராகும்.
- ✓ கல்விப் படங்களால் பலவகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை முதலியவற்றையும் வாழ்க்கையில் நேரில் காண முடியாத பல இடங்களையும் காண முடிகிறது.
- ✓ செய்தி படங்கள் வாயிலாக உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

**கருத்துப்படம்**

- ✓ ஒரே செயலை குறிக்கும் பல்லாயிரக்கணக்கான, ஒன்றுக்கொன்று சிறிது மாறுபட்ட படங்களை வரைந்து வரிசைப்படி அடுக்கி வைக்கப்பட்டு கருத்து படங்கள் தயாரிக்கப்படுகின்றன.
- ✓ படங்களுக்கு பதிலாக பொம்மைகளை வைத்தும் இந்த இயங்குகிற படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**செய்தி படம்**

- ✓ உலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கும் நிகழ்வுகளையே படமாக்கி காட்டுவது செய்தி படங்கள் ஆகும். திரைப்படம் எடுப்பதை விட செய்தி படம் எடுப்பது கடினமான பணியாகும்.

**விளக்கப்படம்**

- ✓ ஒரு நிகழ்வை மட்டும் எடுத்துக் கொண்டு அதைப் பற்றிய முழு விளக்கத்தையும் தருவது விளக்க படமாகும் எடுத்துக்காட்டு உலக தமிழ் மாநாட்டு நிகழ்வு.

**கல்வி படம்**

- ✓ கல்வி கற்பதற்கான விலங்குகளின் வாழ்க்கை பன்னாட்டு மக்களின் வாழ்க்கை முதலியவற்றை படம் பிடித்து மாணவர்களுக்கு காட்டுவதாகும்.

| நாடக ஆசிரியர்கள் | நாடகங்கள் |
|---|---|
| ந. முத்துசாமி | காலம் காலமாக, நாற்காலிகாரர், அப்பாவும் பிள்ளையும், இங்கிலாந்து சுவரொட்டிகள், உந்திச்சுழி கட்டியக்காரன், விறகு வெட்டிகள், வண்டிச் |

| | |
|---|---|
| | சோடை, நற்றுணை அப்பன் (அ) கடவுள். |
| இந்திரா பார்த்தசாரதி | ராமானுஜர், இறுதி ஆட்டம், கொங்கை தீ, அவுரங்கசீப், நந்தன் கதை, பசி , மழை, கால எந்திரங்கள், புனரபி ஜனனம் புனரபி மரணம், தர்மம், போர்வை போர்த்திய உடல்கள் |
| சே.ராமானுஜம் | புறஞ்சேரி, பிணம் தின்னும் சாத்திரங்கள், சுமை, முகப்போலிகள், சஞ்சயன் காட்சி தருகிறான், அக்கினி குஞ்சு, கேகயன் மடந்தை, வெறியாட்டம், செம்பவளக்காளி, மௌனகுறம் |
| மு. ராமசுவாமி | துர்க்கிர அவலம், சாபம்! விமோசனம் ?, புரட்சிக்கவி, ஆபுத்திரன் |
| பிரபஞ்சன் | முட்டை, அகல்யா |
| ஜெயந்தன் | மனுசாமனுசா, நினைக்கப்படும் |
| ஞான ராஜசேகரன் | வயிறு, மரபு, பாடலிபுத்திரம் |
| பிரளயன் | உபகதை, நவீன மத்த விலாச பிரகடனம் அல்லது காஞ்சி தலைவி |
| எம்.டி.முத்து குமாரசாமி | சைபீரிய நாரைகள் இனி இங்கு வரப்போவதில்லை, குதிரைக்காரன் கதை |
| இன்குலாப் | ஔவை, மணிமேகலை |
| எஸ்.எம்.ஏ. ராம் | சுயதர்மம், மூடிய அறை, மணிமேகலையின் கண்ணீர், எப்போ வருவாரோ ? |
| கே. ஏ. குணசேகரன் | பலியாடுகள், சத்திய சோதனை, பவளக்கொடி அல்லது குடும்ப வழக்கு, அறிகுறி, பாறையை பிளந்து கொண்டு |

| | |
|---|---|
| | கனவுலகவாசி, தொட்டில் தொடங்கி |
| ரமேஷ் பிரேம் | ஆதியிலே மாம்சம் இருந்தது, அமீபாக்களின் காதல் |
| எஸ். ராமகிருஷ்ணன் | உருளும் பாறைகள், தனித்திருக்கப்பட்டவர்கள், சூரியனின் அறுபட்ட சிறகுகள், அரவான் |
| வ. ஆறுமுகம் | கருஞ்சூழி, ஊசி, தூங்கிகள் |
| அ. ராமசாமி | ஒத்திகை, மூடதேசத்து முட்டாள் ராஜா, தொடரும் ஒத்திகைகள், 10 குறு நாடகங்கள் |
| முருக பூபதி | சரித்திரத்தின் அதீத மியூசியம், கண்ணாடியுள் அலையுரும் பிம்பங்கள், வனத்தாதி, தேக வயல், ரகசிய நிழல்கள், கூந்தல் நகரம், செம்மூதாய் |

www.tnpscgroup4.in